भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU CG 731010

29.11.2021
Thiagarajar college of preceptors
Madurai

பி.ஆர். பூமிநாத், ஆர்.ஒ.சி. நிர் 9125/B1/2 முத்திரைத்தாள் விற்பனையாளர், 117, பேலஸ் ரோடு, மதுரை-625 001

SUB TREASURY SOUTH MADURAI

## புரிந்துணர்வு ஒப்பந்தம்

## (Memorandum of Understanding)

2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் நாள் இன்றைய தேதியில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இணைவுபெற்று மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், எண்:3, தெப்பக்குளம் மேற்கு, மதுரை-9 பகுதியில் இயங்கும் அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரியான தியாகராசர் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர்.சீ.பிரகாஷ் ஆகிய நான் (நபர்1)

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், தெப்பக்குளம், மதுரை-9 பகுதியில் இயங்கி வரும் அரசு உதவிபெறும் தியாகராசர் நன்முறை மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு.பா.செந்தில்அரசு ஆகிய நான் (நபர்2) ஆகிய நாம் இருவரும் ஒருமனதாக இணைந்து ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் யாதெனில்,

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழுவின் தீர்மானத்தின்படி, இச்சமுதாய முன்னேற்றத்திற்காகவும், இப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் கல்விச்சார்ந்த, பணிபுரியும் ஆசிரியர்களின் திறன் சார்ந்த மற்றும் பிற வளர்ச்சி சார்ந்த முன்னேற்றத்திற்காகவும், கீழ்க்குறிப்பிட்ட செயல்பாடுகளை 1ம் நபரின் கல்லூரியின் சார்பாக செய்வதென ஒப்புக்கொண்டு, அதற்கு 2ம் நபரின் பள்ளியின் சார்பில் முழு ஒத்துழைப்பினை முழு மனதுடன் வழங்குவதாக உறுதி அளித்து இந்த ஒப்பந்தம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்த இயக்குநர் மற்றும் பல்கலைக்கழக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் செய்துகொள்ளப்படுகிறது.

செயல்பாடுகள் விபரம்:

- பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்துவதற்கு கல்லூரி நிர்வாகத்தினால் தேவையான தனித்திறன் பயிற்சியினை வழங்கி கல்வித் தரத்தை மேம்படுத்துதல்.
- பள்ளியில் அவ்வப்போது நடைபெறும் விளையாட்டு மற்றும் கலைப்போட்டிகள், அறிவியல் சார்ந்த பிற செயல்பாடுகளில் கல்லூரியில் பயிலும் B.Ed மாணவர்களை சிறு குழுக்களாக (அதிகபட்சம் 5) பிரித்து பங்கேற்கச் செய்து மாணவர்களின் தலைமைப் பண்பை மேம்படுத்துதல்.
- பள்ளியின் கற்றல், கற்பித்தல் செயல்முறையின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான உதவிகளைச் செய்தல்.
- பள்ளியின் மாணவர் சேர்க்கையினை ஊக்குவிக்க தேவையான உதவிகளை செய்தல்.

Signature of the HM
Headmaster
Thiagarajar Model Hr. Sec. School
Madurai-625 009

Dr. S. PRAKASH, M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D(Edn),
Signature of the College Principal
Principal
Thiagarajar College of Preceptors
Teppakulam, Madurai-625 009
Tamilnadu

Signature of the MOU Director
Prof. S. Mani
MOU Director
Tamil Nadu Teachers Education University

Signature of the District Co-Ordinator

Signature of the Registrar
REGISTRAR i/c
TAMIL NADU TEACHERS EDUCATION UNIVERSITY
KARAPAKKAM, CHENNAI - 600 097.